செய்தி வெளியீடு எண்:063 நாள் : 29.01.2016

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (29.1.2016), தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தால், திருச்சிராப்பள்ளி மாவட்டம் – மணப்பாறை வட்டம், மொண்டிப்பட்டி கிராமத்தில் 1650 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ள இருபுறமும் மேற்பூச்சு செய்யப்பட்ட அடுக்கு காகித அட்டை தயாரிக்கும் தொழிற்சாலையை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாகத் திறந்து வைத்தார்கள். மேலும், கரூர் மாவட்டம்– காகிதபுரத்தில் அமைந்துள்ள தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் விரிவாக்கம் செய்யப்பட்ட சிமெண்ட் தொழிற்சாலை மற்றும் மாயனூரில் அமைந்துள்ள தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் 30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் காகிதம் மற்றும் அடுக்கு காகித அட்டையிலிருந்து மதிப்பு கூட்டிய பொருட்களை உற்பத்தி செய்யும் மையம், செங்கல்ராயன் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் 135 கோடியே 20 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள 18 மெகாவாட் இணைமின் உற்பத்தி நிலையம் மற்றும் நவீனமயமாக்கப்பட்ட ஆலை ஆகியவற்றை திறந்து வைத்தார்கள். மேலும், 1031 கோடியே 15 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம், தமிழ்நாடு உப்பு நிறுவனம், கள்ளக்குறிச்சி–II, சுப்ரமணிய சிவா, அமராவதி மற்றும் சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை ஆகியவற்றின் திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்கள்.

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் மூலம் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் ஆண்டொன்றுக்கு இரண்டு லட்சம் டன் திறன் கொண்ட இரு புறமும் மேற்பூச்சு செய்யப்பட்ட அடுக்கு காகித அட்டை (Multilayer Double Coated Board) தயாரிக்கும் புதிய ஆலை நிறுவப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 7.5.2013 அன்று சட்டப்பேரவையில் அறிவித்தார்கள். அதன்படி, தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் சார்பில் திருச்சிராப்பள்ளி மாவட்டம் – மணப்பாறை வட்டம், மொண்டிப்பட்டி கிராமத்தில், 1650 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ள ஆண்டொன்றுக்கு இரண்டு லட்சம் திறன் கொண்ட இருபுறமும் மேற்பூச்சு செய்யப்பட்ட அடுக்கு காகித அட்டை தயாரிக்கும் தொழிற்சாலையை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று காணொலிக் காட்சி மூலமாகத் திறந்து வைத்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் இன்று திறந்து வைக்கப்பட்ட இந்த தொழிற்சாலையானது, இந்தியாவிலேயே, அதிக உற்பத்தி திறனும், மிக நவீன தொழில்நுட்பங்களை கொண்ட அடுக்கு காகித அட்டை தொழிற்சாலையாகும். இந்த ஆலையின் மூலம், 2000 நபர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பு கிடைக்கும். இந்த ஆலையை நிறுவியதன் மூலம், தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் மொத்த உற்பத்தி திறன் ஆண்டொன்றுக்கு 4 லட்சம் டன்னிலிருந்து 6 லட்சம் டன்னாக உயர்வதோடு, இந்திய அளவில் இந்நிறுவனத்தின் மொத்த உற்பத்தி திறன் மூன்றாம் இடத்திற்கு உயரும்.

மேலும், இந்த ஆலை வளாகத்திற்குள் தேக்கு, மா, தென்னை, வேம்பு போன்ற 68 வகையான, 6,80,000 மரக்கன்றுகளை நடும் அடையாளமாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் மரக்கன்றினை, மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு.பி. தங்கமணி அவர்களிடம் வழங்கினார்கள். இம்மரக்கன்றுகளின் வளர்ச்சிக்காக ஆலையின் கழிவுநீர் முழுமையாக சுத்திகரிக்கப்பட்டு சொட்டுநீர் பாசனம் மூலம் பயன்படுத்தப்படும். இதன்மூலம் இப்பகுதியில் பசுமை போர்வை அதிகரிக்கப்பட்டு சுற்றுச்சூழல் மேம்படும்.

மேலும், தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் சார்பில், கரூர் மாவட்டம்– மாயனூரில், சுமார் 500 நபர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பு கிடைத்திடும் வகையில், 30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் காகிதம் மற்றும் அடுக்கு காகித அட்டையிலிருந்து, நோட்டுப் புத்தகம், அட்டை பெட்டி தயார் செய்தல் போன்ற மதிப்புக்கூட்டிய பொருட்களை உற்பத்தி செய்யும் மையம்;

கரூர் மாவட்டம் – காகிதபுரத்தில் அமைந்துள்ள தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் தொழிற்சாலைக்கு அருகில், இந்தியாவிலேயே முதன் முறையாக காகித ஆலையில் உற்பத்தியாகும் திடக் கழிவுப் பொருட்களைக் கொண்டு சிமெண்ட் தயாரிக்கும் வகையில், 50 ஏக்கர் நிலப் பரப்பளவில், காகித தயாரிப்பில் உருவாகும் திடக்கழிவுகளான, சுண்ணாம்பு கழிவு மற்றும் எரிசாம்பலை பயன்படுத்தி உயர்தர சிமெண்ட் தயாரிக்கும்

சிமெண்ட் தொழிற்சாலையின் உற்பத்தி திறனை 50 கோடி ரூபாய் செலவில் நாளொன்றுக்கு 600 மெட்ரிக் டன்னிலிருந்து 900 மெட்ரிக் டன்னாக விரிவாக்கம் செய்யப்பட்ட சிமெண்ட் தொழிற்சாலை;

விழுப்புரம் மாவட்டம் – பெரியசெவலை கிராமத்தில் அமைந்துள்ள செங்கல்ராயன் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் 135 கோடியே 20 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள 18 மெகாவாட் இணைமின் உற்பத்தி நிலையம் மற்றும் நவீனமயமாக்கப்பட்ட ஆலை;

என மொத்தம், 1865 கோடியே 20 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் தொழிற்சாலைகள், செங்கல்ராயன் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் அமைக்கப்பட்டுள்ள இணைமின் உற்பத்தி நிலையம் ஆகியவற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

அரியலூரில் அமைந்துள்ள தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனத்தின் உற்பத்தி திறனை 750 கோடி ரூபாய் செலவில் ஆண்டொன்றுக்கு 5 லட்சம் மெட்ரிக் டன்னிலிருந்து 15 லட்சம் மெட்ரிக் டன்னாக உற்பத்தித் திறனை உயர்த்திடும் தொழிற்சாலையின் விரிவாக்கம்;

இராமநாதபுரம் மாவட்டம் – வாலிநோக்கம், மாரியூர் வாலிநோக்கம் உப்புக்கூட்டுத் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு உப்பு நிறுவனத்தின் சார்பில் ஆண்டொன்றுக்கு 40,000 டன் சுத்திகரிக்கப்பட்ட அயோடின் கலந்த உப்பினை தயாரிக்கும் திறனுடன், 5 கோடியே 65 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 5 ஏக்கர் நிலப் பரப்பளவில், நிறுவப்படவுள்ள உப்பு சுத்திகரிப்பு தொழிற்சாலை;

கோயம்புத்தூர் மாவட்டம் – வடக்கு கோயம்புத்தூர் வட்டம், சோமையம்பாளையம் கிராமத்தில், கோயம்புத்தூர் அண்ணா பல்கலைக்கழகத்துக்கு சொந்தமான 10 ஏக்கர் நிலப் பரப்பளவில், 2 லட்சம் சதுரஅடி கட்டட பரப்பளவில், தரை மற்றும் 13 தளங்களுடன், 55 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் மற்றும் டைடல் தகவல் தொழில்நுட்ப பூங்கா இணைந்து அமைக்கவுள்ள டைசல் உயிரியல் தொழில்நுட்ப பூங்கா–III;

விழுப்புரம் மாவட்டம் – கச்சிராயபாளையம் கிராமத்தில் அமைந்துள்ள கள்ளக்குறிச்சி–II கூட்டுறவு சர்க்கரை ஆலை மற்றும் தருமபுரி மாவட்டம் – ஆலாபுரம் கிராமத்தில் அமைந்துள்ள சுப்ரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் 203 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள நாளொன்றுக்கு 45 கிலோ லிட்டர் உற்பத்தி திறன் கொண்ட வடிப்பகத்துடன் கூடிய எத்தனால் ஆலைகள்;

திருப்பூர் மாவட்டம் – கிருஷ்ணாபுரம் கிராமத்தில் அமைந்துள்ள அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை மற்றும் நாமக்கல் மாவட்டம் – மோகனூரில் அமைந்துள்ள சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் 17 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள ஈரடுக்கு எதிர்மறை சவ்வூடு பரவல் முறை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் (Reverse Osmosis Effluent Treatment Plant);

என மொத்தம் 1031 கோடியே 15 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான திட்டப் பணிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று அடிக்கல் நாட்டினார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்து துறை அமைச்சர் திரு.பி.தங்கமணி, தலைமைச் செயலாளர் திரு.கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு ஆலோசகர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப., (ஓய்வு), தொழில் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ச.வி. சங்கர், இ.ஆ.ப., சர்க்கரைத் துறை இயக்குநர் திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் மற்றும் தமிழ்நாடு உப்பு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு.சி.காமராஜ், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

*******

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.
நாள் : 29.1.2016